# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.41/2025 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வெங்கடேஷ் | த-பெ | சுப்ரமணியன் |
| ஊர்: | : | கருவியபட்டி | | |
| வயது: | : | 23/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | போட்டோ கிராபர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கருவியபட்டியில் வசித்து போட்டோ கிராபராக வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. 2023 ம் வருடம் ஒரு நாள் நான் ஒரு வழக்கு தொடர்பாக சாக்கோட்டை காவல் நிலையம் சென்று இருந்தேன். என்னிடம் போலீசார் ஒரு ஆவணத்தில் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 12.** வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 08.12.2023 அன்று மதியம் 1.30 மணிக்கு மாத்தூர் - தேவக்கோட்டை செல்லும் வழியில் முத்து என்பவர் தோட்டத்தின் அருகில் நின்று கொண்டிருந்தபோது சாக்கோட்டை போலீசார் ஏற்கனவே அங்கு நடந்த சாலை விபத்து ஒன்று குறித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.24 11:00:22 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.